# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# கேள்வி அறிவித்தல்

# பயன்படுத்திய வாகனத்தை விற்றல்

**இந்த அமைச்சினால் பயன்டுத்திய பின்வரும் வாகனம் விற்பனை செய்வதற்கு பொறியிடப்பட்ட கேள்விதாரர்கள் கோரப்படுகின்றனர்**

| வாகனத்தின் இலக்கம் | உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு மற்றும் பதிவுச் சான்றிதழ் மூலச்சான்றிதழா / நகல் சான்றிதழா | வாகனத்தின் வகை / மாதிரி | டீசல்/ பெட்ரோல் |
|---|---|---|---|
| KA 2676 | 2005 / மூலச்சான்றிதழ் | லாண்ட் குரூஸர் (Land Cruiser) பராடோ (Prado) | பெட்ரோல் |

- மேலே விபரிக்கப்பட்டுள்ள பயன்படுத்திய வாகனம் விற்பனை செய்வதற்காக, இந்த அமைச்சின் பெறுகைக் குழுவின் தவிசாளர் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுச் செயலாளர் சார்பாக பொறியிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

- ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், மேலதிக தகவல்களை கொழும்பு-05, நாரஹேன்பிட்டி, "மெஹெவர பியெச", 6 ஆவது தளத்தில் அமைந்துள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நிருவாகப் பிரிவின் உதவிச் செயலாளரிடமிருந்து (பெறுகை) எந்த அலுவலக நாளிலும் மு.ப 9:00 மணி முதல் பி.ப. 3:00 மணி வரை (தொலைபேசி இல.: 0112 368 136, தொலைநகல் இல.: 0112 368 165, மின்னஞ்சல்: as.proc@labourmin.gov.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

- வாகனத்தைப் பரிசோதிப்பதற்கான அனுமதி உள்ளடங்கலாக, உரிய கேள்வி ஆவணங்களை, 2023.09.13 ஆம் திகதியிலிருந்து 2023.09.27 ஆம் திகதி வரை எந்த அலுவலக நாளிலும் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை மீளப்பெற முடியாத கட்டணமாக 2,000.00 ரூபாவை கொழும்பு-05, நாரஹேன்பிட்டி, "மெஹெவர பியெச", 6 ஆவது தளத்தில் அமைந்துள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கணக்குகள் பிரிவில் காசாளரிடம் செலுத்தி, அதே தளத்திலுள்ள நிருவாகப் பிரிவில் பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும்.

- கேள்விகளைச் சமர்ப்பித்தலானது, கொழும்பு-05, நாரஹேன்பிட்டி, "மெஹெவர பியெச", 6 ஆவது தளத்தில் அமைந்துள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கணக்குகள் பிரிவில் காசாளரிடம் மீளப்பெறக்கூடிய வைப்புத் தொகை 25,000.00 ரூபா செலுத்தப்படுவதற்கு அமைவானதாகும்.

- வாகனத்தைப் பரிசோதிப்பதற்கான அனுமதியைக் கொண்டிருக்கின்ற ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மாத்திரமே 2023.09.13 ஆம் திகதியிலிருந்து 2023.09.27 ஆம் திகதி வரை எந்த அலுவலக நாளிலும் மு.ப 10:00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு வளாகத்தில் வாகனத்தைப் பரிசோதிப்பதற்கு அனுமதிக்கப்டுவார்கள்.

- பொறியிடப்பட்ட கேள்விகள், பின்வரும் முகவரியில் காணப்படுகின்ற கேள்விப் பெட்டிக்குள் 2023 அக்டோபர் 02ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக இடப்படுதல் வேண்டும். கேள்விகளைச் சமர்ப்பித்தலானது, 2023 அக்டோபர் 02ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு மூடப்படும். **காலதாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்**

- **சமர்ப்பிப்பதற்கான முகவரி:**

  **மேலதிக செயலாளர் (நிருவாகம்),**
  **நிருவாகப் பிரிவு,**
  **தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு,**
  **6 ஆவது தளம், " மெஹெவர பியெச",**
  **நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.**

- கேள்வியானது, பொறியிடப்பட்ட கடிதஉறையில் இடப்பட்டு, கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் "**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பயன்படுத்தப்பட்ட வாகன விற்பனைக்கான கேள்வி**" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

- கேள்விகள், கொழும்பு 05, நாரஹேன்பிட்டி, "மெஹெவர பியெச", 6 ஆவது தளத்தில் அமைந்துள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (நிருவாகம்) தளத்தில் மூடப்பட்டு, பின்னர் உடனடியாக திறக்கப்படும் என்பதுடன்,**கேள்வி திறக்கப்படுகின்ற தருணத்தில் கேள்விதாரர்கள் அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த இடத்தில் சமூகமளித்திருத்தல் வேண்டும்**. கேள்விதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அந்த கேள்விதாரர் , கேள்வி மதிப்பில் 25% இனை அத்தருணத்திலேயே பணமாகச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுகின்றமை, வாகனத்திற்காக வைப்புச் செய்யப்பட்ட மீளப்பெறக்கூடிய. 25,000.00 ரூபாவினைத் மீளப் பெற முடியாத விளைவினை ஏற்படுத்தும்.

- ஒதுக்கப்பட்ட வாகனமானது, மிகுதிப் பணத் தொகை செலுத்தப்பட்டு, 3 அலுவலக நாட்களுக்குள் அமைச்சின் வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுகின்றமையானது, ஒதுக்கக் கட்டணத்தில் 25% இனையும், மீளப்பெறக்கூடிய வைப்புத் தொகையான 25,000.00 ரூபா வினையும் அரச உடமையாக்குவதனை விளைவாக்கும். மேலும் கேள்வி நிபந்தனைகளை மீறியதாக அவர் சார்பில் அளிப்பு செய்யப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

- இந்த கேள்வி தொடர்பில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுப் பெறுகைக் குழுவின் முடிபே இறுதியானது.

**தவிசாளர்**
**அமைச்சுப் பெறுகைக் குழு**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**